
வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்
குருவே துணை
வேதாத்திரியப் பார்வையில்
திருவாசகத்தின்
அதிசயப் பத்து...
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# வேதாத்திரியப் பார்வையில்

# திருவாசகத்தின் அதிசயப் பத்து

## அருள்நிதி

## மன்னார்குடி பானுகுமார்

**அதிசயப் பத்து - முத்தி இலக்கணம்**

(திருப்பெருந்துறையில் அருளியது - அறுசீர்க்கழி நெடிலுடி ஆசிரிய விருத்தம்)

# இதனுள்ளே

1. அகநோக்குப் பயிற்சி” தரும் அதிசயங்கள்.
2. பற்றொழித்த வாழ்வில் அதிசயங் காணலாம்.
3. வினையழியும் அதிசயம்.
4. ஐம்புலன்களைக் வென்றிடும் அதிசயம்.
5.காயகற்ப பயிற்சியால் காமத்தை வெல்லும் அதிசயம்.
6. நல்லாரிணக்கம் தந்து ஆட்கொண்ட அதிசயம்.
7. தவறுகளைத் திருத்தும் அசிசயம்
8. பரமானந்தம் அடையும் அதிசயம்.
9. அரூபம் உணரும் அதிசயம்.
10.மும்மலங்களிலிருந்து வெளியே வரும் அதிசயம்!

## **1.** ”அகநோக்குப் பயிற்சி” தரும் அதிசயங்கள்.

**உண்மை ஞானம் தெளிந்தவர்**

எது சரி, எது தவறு என்று மக்கள் குழம்பும் போது, உண்மை அறிந்த ஞானியர்களை மக்கள் நாடினார்கள்.

அனைத்தும் துறந்த, சுயநலம் இல்லாதவர்கள் ஞானிக ள. அவர்கள் சொல்வதை மக்கள் சந்தேகம் கொள்ளாமல் ஏற்று நடந்தார்கள்.

புத்தர், இயேசு, சங்கரர், இராமானுஜர், வள்ளலார், வள்ளுவர்,

தாயுமானவர், வள்ளலார், மாணிக்கவாசகர், வேதாத்திரி மகரிஷி போன்றவர்கள் மக்களை வழி நடத்தினார்கள்.

ஆனால், இன்று அப்படி யார் இருக்கிறார்கள்? யாரிடம் போய் கேட்பது?

யார் உண்மையானவர், யார் பொய்யானவர் என்று தெரியாமல் மக்கள் குழப்புகிறார்கள்.

உண்மை ஞானம் கண்டு தெரிந்தவர்கள் எப்படி இருப்பார்கள் என்று பட்டினத்தார் இலக்கணம் சொல்லுகிறார்.

நீங்கள் யார் பேச்சையாவது கேட்தாய் இருந்தால், அவர்களுக்கு இந்த இலக்கணம் பொருந்துகிறதா என்று பாருங்கள். இல்லாவிட்டால் கேட்காதீர்கள்.

"பேய்போல் திரிந்து பிணம்போல் கிடந்திட்ட பிச்சையெல்லாம்
நாய்போல் அருந்தி நரிபோல் உழன்று நன்மங்கையரைத்
தாய்போல் கருதித் தமர்போல் அனைவர்க்கும் தாழ்மைசொல்லி
சேய்போல் இருப்பர்கண் டீருண்மை ஞானம் தெளிந்தவரே" (பட்.பா.35)

எல்லோரையும் உறவினர் போல நினைத்து பணிவாகப் பேசுவார்கள். என் ஜாதி, என் மதம். இது பார்க்கும் நேரம்.

அதற்கு கட்டணம். யார் கிட்ட வரலாம், யார் தள்ளி நிற்க வேண்டும் என்றெல்லாம் கட்டுப்பாடு கிடையாது.

சேய் போல் இருப்பர் - சின்ன பிள்ளை போல கள்ளம் கபடம் இல்லாமல் இருப்பார்கள்.

முதலில், சாமியாருக்கு மடம் எதற்கு? எல்லாவற்றையும் வேண்டாம் என்று தானே துறவறம் பூண்டு சாமியாராக ஆனாய். பின் எதற்கு மடம்,

அதில் ஏக்கர் கணக்கில் நிலம், பணம், தங்கம், சொத்து, வருமானம், வரி என்றெல்லாம்.

இதற்கும் ஆன்மீகத்திற்கும் என்ன சம்பந்தம்? மடத்தில் இருக்கும் யாரும், பட்டினத்தார் பட்டியலில் வர மாட்டார்கள்.

சொத்து சேர்த்து, அதை காப்பாற்றி, அதை பெருக்கி, அதை நிர்வாகம் பண்ண ஆளை போட்டு, அவன் ஏமாற்றாமல் இருக்கிறானா என்று தெரிந்து கொள்ள ஒரு ஆடிட்டர் ஐ போட்டு...இதெல்லாம் ஞானம் அடைந்ததின் குறியீடா?

உண்மையான ஞானிகளை பார்க்க போக வேண்டும் என்றால் மடத்திற்குப் போகாதீர்கள்.

எந்த மதத்திலும், எந்த பிரிவிலும், எங்கே பணமும் சொத்தும் புரள்கிறதோ அங்கே ஞானம் இருக்காது.

உங்களுக்கு பணம் வேண்டும், செல்வாக்கு வேண்டும், காரியம் நடக்க யாரையாவது பிடிக்க வேண்டும் என்றால் அங்கே போங்கள். ஞானம்?

ஞானிகள் தங்களை வெளியே காட்டிக் கொள்ள மாட்டார்கள். ஞானம் எங்கே இருக்கிறது என்று நீங்கள் தேடிப் போக வேண்டும்.

அந்தத் தேடல் தான் உங்கள் ஞானத்தின் முதல் படி. திருவாசகமும் வேதாத்திரியம் நோக்கி வாருங்கள்.

”வைப்பு மாட என்றும் மாணிக்கத்து
  ஒளியென்றும் மனத்திடை உருகாதே
செப்பு நேர்முலை மடவரலியர்
  தங்கள் திரத்திடை நைவேனை
ஒப்பிலாதன உவமணில் இறந்தன
  ஒண்மலர்த் திருப்பாதத்து
அப்பன் ஆண்டுதன் அடியரில்
  கூட்டிய அதிசயங் கண்டாமே.” (திருவாச.பா.428)

- சிமிழ் போன்று குத்திட்டு நிற்கும் முலையினை உடைய இளமகளிர் இன்பத்தில் திளைத்து மெலிந்து போனேன்.
- என் தந்தையினது திருவடியை, ”தேடி வைத்த செல்வம்” என்றும், ”மாணிக்க மணியின் ஒளி என்றும், மனத்தில் கொண்டு உருகவில்லை.
- இருந்தும் ஒப்பு உவமை கூற முடியா ஒளி பொருந்திய தனது தாமரை மலர் போன்ற திருவடிகளைத் தந்து. ஆட்கொண்டு. அடியார் திருக்கூட்டத்தில் என்னை சேர்த்துக் கொண்டான்.
- இது வியப்புக்கு உரிய செயல் என்று அறிந்து கொண்டேன்.

”அகநோக்குப் பயிற்சி” யால் இறைநிலை உணர்ந்து தெளிவு பெறலாம். மாணிக்கவா கரைப் போல நம்மையும் இறைநிலை ஆட்கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

”இறையுணர்வார் சிலமுயன்று வேதநூல்கள் மூலம்
  இவ்விறையே அறிவுஎன உணர முடியாமல்,
இறைவேறாய் அறிவுவேறாக எண்ணி எண்ணி,
  எழும்பிணக்கில் புரட்டுபுரண்டே மயக்கில் மாள்வார்.
இறைநிலையே அறிவாக இயங்கும் உண்மைகாண,
  ஏற்றதொரு சாதனைதான் அகநோக்குப் பயிற்சி.

இறையறிவாய் உலகாக உயிர்களாகத் திகழும்
  இந்தஉண்மை உயிர்மீது மனம் ஒடுங்க ஒளிரும்." (ஞாக.பா.1407)

இறைநிலையை அறிய வேண்டும் என்ற எண்ண எழுச்சி மனிதராகப் பிறந்தவர்க்கு ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்படுவது இயல்பு.

அவ்வாறு சிலர் தன்னை அறிய வேண்டும், கடவுள் தத்துவத்தை அறிய வேண்டும் என்று முயற்சிப்பார்கள்.

வேத நூல்களைப் படித்தும், இறைநிலையே, அறிவாகவும், தானாகவும் இருக்கிறது என்பதை உணர முடியாமல், இறை நிலையையும் அறிவையும் வேறு வேறா எண்ணி, அறிவிற்குப் பொருந்தா வகையில், மனம் பிணக்கமடைந்து. மயக்குற்று அலைந்து திரிந்து மடிந்தும் போவார்கள்.

இறைநிலையானது அறிவாகவும் உள்ளது என்ற உண்மையை உணர்வதற்கு உகந்த சாதனை மார்க்கம் தான் அகநோக்குப் பயிற்சியாகிய குண்டலினி யோகம் ஆகும்.

மனதின் அலைச்சுழல் வேகத்தைக் குறைப்பதற்கு உயிரில் மனதை ஒடுக்க வேண்டும்.

அந்நிலையில் இறை நிலையே அறிவாகவும், உலகங்களாகவும், உயிர்களாகவும் திகழ்கின்றது என்னும் உண்மையை உணர்வதால், அறிவில் தெளிவு ஏற்படும். வாழ்க வளமுடன்.

## 2. பற்றொழித்த வாழ்வில் அதிசயங் காணலாம்.

"மக்களில்  பெரும்பான்மையோர் ஒரு பூந்தோட்டத்தின் அழகைக் கண்டு ரசிக்கின்றார்.

அத் தோட்டத்தினை உருவாக்கியவனைப் பற்றி அவர்கள் ஒன்றும் நினைப்பதில்லை.

அதே விதத்தில் இப்பிரபஞ்சம் என்னும் தோட்டத்தை மக்கள் கண்டு களித்துக் கொண்டிருக்கின்றனர்.

இதற்கு ஆதி மூலமாயிருக்கும் இறைவனைப் பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை.

உலகுக்கு முதல் காரணமாகிய இறைவனை அடைவதுதான் மானுடப் பிறவியின் குறிக்கோள்.  தோட்டத்தை ரசிப்பதோடு நின்றுவிடுவதல்ல. (ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மஞ்சரீ -பக்.22)

“நீதியாவன யாவையும்
  நினைக்கிலேன் நினைப்பவரொடு கூடேன்
ஏதமே பிறந்து இறந்து உழல்
  வேன்தனை என் அடி யான் என்று
பாதி மாதொடும் கூடய
  பரம்பரன் நிரந்தர மாய் நின்ற
ஆதி ஆண்டுதன் அடியரில்
  கூட்டிய அதிசயம் கண்டாமே.” (திருவாச.பா.429)

நேர்மறையைப் பற்றி ஒருபோதும் சித்தித்தது இல்லை. அப்படி சிந்திப்பவரோடு பழகுவதும் இல்லை.

குற்றமே வடிவாய், பிறந்து, பின் இறந்து, தொடர்ந்து இப்படியே அலைந்து துன்புற்று இருந்தேன்.

உமை ஒரு பாகனாய் மிக மேலான பொருளாய் விளங்குபவன், என்னையும் தன் அடியவன் என்று நிரந்தரமாக ஏற்றுக் கொண்டான்.

எல்லாவற்றுக்கும் மூலமாய் விளங்கும் அவன், என்னை ஆட்கொண்டு, தன் அடியார் திருக்கூட்டத்தில் சேர்த்துக் கொண்டான். இது வியப்புக்கு உரிய செயல் என்று அறிந்து கொண்டேன்.

”பற்றும் பாசமும் ஒழிந்த வாழ்வு” வேண்டும் என்கிறது வேதாத்திரியம்.

பற்றும் பாசமும் ஒழித்த வாழ்வினால், இறைவன், அடியார் திருக்கூட்டத்தில் சேர்த்துக் கொள்வதில் வியப்பில்லையே!

”பொருள்பற்று மக்கள்பற் றிரண்டும்என்றும்
  புவிமீது மனிதரிடைப் பிளவைத் தோற்றும்
பொருள்ஈட்ட, காப்பாற்ற, உரிமை கோரிப்
  போராடி முயற்சியைநாம் வீண்செய் கின்றோம்.
பொருள்இன்பம், உழைப்பு அருள் இழுக் காச்சு
  பொறுப்போடு சிந்தித்து திட்ட மிட்டுப்
பொருள்மக்கள் பற்றொழித்த வாழ்வு கண்டால்
  பொங்கிவரும் இன்பம். அறவாழ்வு கிட்டும்.” (ஞாக.பா.427)

தனக்குச் சொந்தமான பொருட்கள் மீது ஒரு மனிதர் பற்றுக் கொண்டாலும் தனக்குச் சொந்தமானவர்கள் என்று மக்கள் பேரில் பாசம் என்ற பற்றுக் கொண்டாலும், உலக மக்களிடையில் பிரிவினைகளாக உருவாகும்.

பொருட்களை சம்பாதிக்கவும் சம்பாதித்த பொருள்களைக் காப்பாற்றவும் பாத்தியதை என்னும் உரிமை கேட்டுப் போராடி நமது முயற்சிகளை, சக்திகளை வீண் செய்கின்றோம்.

அதனால் பொருட்கள், இன்பம், உழைப்பு, அருள் ஆகியவை களங்கமாகி விட்டது.

பொறுப்புடன்  பய உணர்வுடன் உண்மைகளைச் சிந்தித்து, சரியாகத் திட்டமிட்டு, பொருள் பற்று மக்கள் பாசத்தை ஒழிக்க வேண்டும்.

அம்முறையில் வாழ்ந்தால் இன்பம் பொங்கிப் பெருகும் அறவாழ்வு தழைக்கும். ஆனந்தமாக வாழலாம்.  வாழ்க வளமுடன்.

# 3. வினையழியும் அதிசயம்.

"வினைப்பயன் எல்லா சரீரங்களுக்கும் உண்டு.  அந்த வினைப் பயன்களும் ஈசன் செயலே.

தங்கபஸ்பம் செய்கிற வைத்தியர்கள் ஒரு மூசைக்குள் ஏதேதோ ரசாயன வகைகளையும் மூலிகைகளையும் போட்டுத் தங்கத்துண்டு ஒன்றையும் அதனுள் வைத்துப் புடம் போட்டு ஊதுகின்றனர்.

தங்கம் உருகி மற்ற மூலிகைகளோடு கூடி தங்கபஸ்பம் ஆகிறது. அதன் பிறகு மூசையை ஜாக்கிரதையாக வைத்திருந்தால் என்ன? பெறவேண்டிய தங்கபஸ்பத்தைச் செய்தாகிவிட்டது.

கைலாசத்திலிருந்து, சாது பிரம்ம ஞானத்தை அடைந்து விட்டார். அவர் உடலுக்கு அழிவு எவ்வித்தில் வந்தால்தான் என்ன?

அதனால் அவருக்கு கஷ்டம் ஒன்றுமில்லை.  அவர் கஷ்டப்பட்டார் என்று அறியைமையால் நாம் எண்ணுகிறோம்.(ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேச மஞ்சரீ)

"முன்னை என்னுடை வல்வினை
  போயிட முக்கண்துடைஎந்தை
தன்னை யாவரும் அறிவதற்கு
  அரியவன் எளியவன் அடியார்க்குப்
பொன்னை வென்றதோர் புரிசடை
  முடிதனில் இளமதிய அதுவைத்த
அன்னை ஆண்டுதன் அடியரில்
  கூட்டிய அதிசயம் கண்டாமே." (திருவாச.பா.430)

- மூன்று கண்களை உடைய எம் தந்தை.
- தன்னை யாரும் அறியமுடியாத தன்மை உடையவன்.
- அடியவர்களுக்கு எப்பொழுதும் எளிதில் அருள் பாலிப்பவன்.

என்னுடைய வலிய வினை முழுவதையும் அழியுமாறு செய்தவன்.

அவன் என்னை ஆட்கொண்டு தன் அடியார் திருக்கூட்டத்தில் சேர்த்துக் கொண்டான். இது வியப்புக்கு உரிய செயல் என்று அறிந்து கொண்டேன்.

வினையழியும் அதிசயத்தை வேதாத்திரியத்தில் காணலாம்.

"பல ஆயிரம் பிறவி எடுத்தேற்றப் பாவப்
  பதிவுகளை, ஒரு பிறவிக் காலத்துள் மாற்றி,
நலமடைந்து மனிதனாகித் தெய்வமாகி உய்ய,
  நல்லவாய்ப்பு ஆற்றல் இவை நமக்களித்து, இயற்கை
நிலஉலகில் மனிதரிடம் அமைந்துளன, உண்மை.
  நேர்முகமாய் கருமைத் தூய்மை உணர்ந்தாற்றிப்
பலனடைய அகத்தவத்தால் பரமுணர்ந்து, அறத்தின்
  பாதையிலே ஒத்துதவி வாழும்முறை போதும்" (ஞாக.பா.1743)

என்னிலடங்காத பிறவிகளைத் தாண்டி வந்துள்ளது மனிதகுலம்.

உடல், உயிர், மனம், அறிவு, தெய்வம் என்பதைப் பற்றி அறியாமலும், உணராமலும் பழக்கத்தின் வழியே வாழ்ந்து வருகிறது மானுடம்.

உடலில் நோய்கள், மனதிலே களங்கம் ஆகியவை வாழ்க்கையில் சிக்கல்களாக துன்ப விளைவுகளை வெளிப்படுத்துகின்றன.

அவை அனைத்தும் பாவப் பதிவுகளின் வெளிப்பாடு ஆகும்.

எத்தனையோ பிறவிகளில் வாழத் தெரியாமல் வாழ்ந்து பெற்ற வினைப்பதிவுகளை, மனிதன் முயன்றால் ஒரே பிறவியில் மாற்றி அமைததுக் கொள்ள முடியும்.

வாழ்க்கை நலன்களை அடைந்து, வித்தின் மூலமாக வெளிப்படும் விலங்குநிலைப் பண்புகளை விடுத்து மனிதனாகலாம்.

அதற்கும் மேல் மாமனித நிலையில் தெய்வமும் ஆகலாம்.

ஆறாவது அறிவு என்ற சிந்தனை செய்யும் நல்ல வாய்ப்பையும், ஆற்றலையும் இயற்கையானது நில உலக மக்களாகி நமக்கு அளித்துள்ளது என்ற உண்மையை உணர வேண்டும்.

களங்கப்பட்டுள்ள கருமையப் பதிவுகளை உணர்ந்து கொள்ள வேண்டும். நேர்மையான வழியில் தூய்மை செய்து கொள்வதற்கு அகத்தவம் இயற்றி, இறைநிலையை உணர்ந்து கொள்ளலாம்.

அறநெறி வழியே, ஒத்தும் உதவியும் வாழும் முறையே போதுமானது ஆகும்.

இறையுணர்வும் அறநெறியும் கருமையத்தைத் தூய்மைப்படுத்தி, பிறவிக்கடலை நீந்தி கரைசேர்வதற்கு உதவி செய்யும்.

திருவாசகம் மற்றும் வேதாத்திரிய வழியில் நாமும் பிறவிக்கடலை கடந்து ஆனந்த வாழ்க்கை வாழ்வோமாக.

"ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தமே!! வாழத் தெரிந்திடில் ஆனந்தமே!!!"

## 4. ஐம்புலன்களைக் வென்றிடும் அதிசயம்.

"சங்கராச்சாரியார் - ஆகாரம் என்பதற்கு "புலன்களால் நுகரப்படும் பொருள்கள்"என்று பொருள் கூறுகிறார்.

இராமனுஜரோ ஆகாரம் என்பதற்கு உணவு என்று பொருள் கொள்கிறார்.

என்னைப் பொறுத்த வரையில் அந்தச் சொல்லிற்கான பொருள் இருவரும் கூறுகின்ற இந்த இரண்டு வகையான கருத்துக்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டுமென்பதே.

நாம் எப்போதும் சாப்பாட்டில் எது தூய்மையானது. எது தூய்மை இல்லாதது என்பதைப் பற்றிய பேச்சிலேயே நம் வாழ்வைக் கழிக்க வேண்டுமா அல்லது நம் புலன்களையெல்லாம் அடக்கிப் பழக வேண்டுமா? நிச்சயமாகப் புலன்களை அடக்குவதுதான் முதன்மையானது." (சுவாமி விவேகானந்தரின் ஞான தீபம் – பாகம்.19 - பக்.236)

"பித்தன் என்று எனை உலகவர்
  பகர்வது ஓர் காரணம் இதுகேளீர்
ஒத்துச் சென்றுதன் திருவருள்
  கூடிடும் உபாயம் அது அறியாமே
செத்துப் போய் அருநரகிடை
  வீழ்வதற்கு ஒருப்படு கின்றேனை
அத்தன் ஆண்டுதன் அடியரில்
  கூட்டிய அதிசயம் கண்டாமே." (திருவாச.பா.431)

இந்த உலக மக்கள் என்னைப் "பித்தன்" என்று கூறுவதற்கான காரணத்தைக் கூறுகிறேன். கேட்பீர்களாக!

இறைவன் காட்டிய வழியில் உட்பட்டுச் சென்று, அவரது திருவருளில் சேரும் வகை அறியாது, இறந்துபட்டு கடுமையான நரகத்தில் விழுவதற்குச் சம்மதம் உடையவனாய் இருந்தேன்.

அப்படி இருந்த என்னை எம் தந்தை தடுத்து ஆட்கொண்டு, தன் அடியார் திருக்கூட்டத்தில் சேர்த்துக் கொண்டான்.  இது வியப்புக்கு உரிய செயல் என்று அறிந்து கொண்டேன்.

புலனடக்கத்தால் அதியங் காணலாம் என்கிறது வேதாத்திரியம். புலனடக்கதால் இறைநிலையுணர்ந்து இறைவனின் திருவடியில் சேரலாம்.

”கண்ணாடியில் உன்னைக்
  கருத்தொடு உற்றுப் பார்!
கருத்துக் கட் புலன்
  ஒன்றில் நிலைத்திடும்.
உண்ணாடி முன் கண்ட
  உருவத்தை நினைத்து நில்!
உள்ளம் ஐம்புலன்களைக்
  கடந்துஉயர்ந்திடும்.” (ஞாக.பா.788)

உயிர்ச் சக்தியானது அறிவுக் கருவிகள், தொழில் கருவிகள் ஆக உள்ள பத்துப் புலன்கள் மூலம் எப்போதும் ளெியேறி செலவாகி உணர்தலாகியது.

மீண்டும் மீண்டும் அந்த உணர்தல் தேவை உணர்வாகி விடுகிறது. உணர்ச்சி, தேவை, முயற்சி, செயல், விளைவு, அனுபோகம். அனுபவம், ஆராய்ச்சி, தெளிவு, முடிவு என்ற வகையில் உடல் இயக்கமும் மன இயக்கமும் நடைபெறுகின்றன.

அறிவுக் கருவிகளாகிய தோல், நாக்கு, மூக்கு, கண்கள், காதுகள் ஆகிய ஐந்தும் அறிவின் கட்டிற்குள் இருக்கும் வரை மனிதன் இனிமையாக வாழலாம்.

புலன் மயக்கத்தால், புலன்களுக்கு அறிவு அடிமையாகி விடும்போது மனித வாழ்வில் துன்பமே விளைகிறது.

ஐயுணர்வில் மெய்யுணர்வு பெறுவதற்கும், உடல், உலகப் பற்றுக்களிலிருந்து விடுபடுவதற்கும், உருவத்தைப் பிரதிபலிக்கின்ற ரசம் பூசிய கண்ணாடியில் பயிற்சி செய்ய வேண்டும்.

கண்ணாடியில் தெரிகின்ற உனது உருவ பிம்பத்தை முறைப்படுத்தப்பட்ட மன ஓர்மையுடன் உற்றுப் பார்க்க வேண்டும்.

மனமானது கண்ணால் எதரில் உள்ள பிரதி பிம்பத்தின் புலன் ஏதாவது ஒன்றில் நிலைத்து நிற்கும்.

அதன் பிறகு கண்களை மூடி உனக்கு உள்ளாக இருக்கும். உனது பிரதி பிம்பத்தை நினைத்து இருந்தால், மனமானது ஐந்து புலன்களைக் கடந்து அறிவாக உயர்ந்துவிடும்.

புலன்களை அடக்குவது என்பது அறிவின் கட்டுக்குள் கொண்டு வருவதாகும்.

புலன்களை கட்டுப்படுத்தி விட்டால் அப்புறம் என்ன? ஆனந்தமான வாழ்வுதான். வாழ்க வளமுடன்.

## 5.காயகற்ப பயிற்சியால் காமத்தை வெல்லும் அதிசயம்

“வேலையில்லாது திண்டாடிக் கொண்டிருந்த ஒருவன் ஒரு அலுவலக நிர்வாகியிடம் எத்தனையோ தடவை போய் வேலை கேட்டான்.

”இப்பொழுது இடம் காலியில்லை. இடையிடையே வந்து கொண்டிரு. ஏதாவது வேலை காலியாகும்பொழுது அதில் உன்னை அமர்த்துகிறேன்” என்று அந்த நிர்வாகி நம்பிக்கை ஊட்டினான்.

ஆனால் வேலை மட்டும் அந்த ஏழைக்குக் கிடைத்தபாடில்லை.

அவன் சலித்துப்போய் தனது பரிதாபகரமான நிலையை மற்றொருவரிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

அப்பொழுது அவனுக்கு ”அந்த நிர்வாகியிடம் வீணாக நடக்க வேண்டாம்.

”அவனுடைய காமக் கிழத் தி குலாப்பிடம் போய் முறையிடு, விரைவில் காரியம் கைகூடும்” என்று ஒரு யோசனை சொல்லப்பட்டது.

அந்த ஏழை மனிதனும் அங்ஙனமே செய்தான். அடுத்த நாள் அவன் ஆள் விட்டு வரழைக்கப்பட்டு அவனுக்கு வேலையும் தரப்பட்டது!

காமத்துக்கு அடிமையாயிருப்பவர்கள் போக்கு இத்தகையது.”
(ஸ்ரீராமகிருஷ்ண உபதேச மஞ்சரீ, பக்.50)

”பரவுவார் அவர் பாடுசென்று
  அணைகிலேன் பன்மலர் பறித்தேத்தேன்
குரவு வார் குழலார் திறத்தே
  நின்றுகுடிகெடு கின்றேனை
இரவு நின்றுஎரி ஆடிய

எம் இறை எரிசடை மிளிர்கின்ற
அரவன் ஆண்டுதன் அடியரில்
கூட்டிய அதிசயம் கண்டாமே.” (திருவாச.பா.432)

இறைவனை வழிபடும் அடியவருடன் சேரவில்லை.

பலவாகிய மலர்களைப் பறித்து. அப்பெருமானுக்குச் சூட்டவில்லை.

தேன் ஒழுகும் குராமலர் அணிந்த நீண்ட கூந்தலை உடைய மகளிருடன் கூடி குடிப்பெருமை கெடுமாறு இருந்தேன்.

இரவு நேரத்திலும் அனலைக் கையில் ஏந்தி நடனம் ஆடுபவனும், ஒளிர்கின்ற சடையை உடையவனாம், பாம்பை அணிகலனாக அணிந்து உள்ளவனும் ஆகிய இறைவன்,

என்னை ஆட்கொண்டு. தன் அடியவர் திருக்கூட்டத்தில் சேர்த்துக் கொண்டான். இது வியப்புக்கு உரிய செயல் என்று அறிந்து கொண்டேன்.

”தேன் ஒழுகும் குராமலர் அணிந்த நீண்ட கூந்தலை உடைய மகளிருடன் கூடி குடிப்பெருமை கெடுமாறு இருந்தேன்” என வருத்தப்படுகிறார் மாணிக்கவாசகர். இதற்கு என்ன செய்ய வேண்டும்? காயகல்ப பயிற்சி வேண்டும் என்கிறது வேதாத்திரியம்.

”கறைபோக்கி வித்ததனை உறையச் செய்யும்
காயகற்பப் பயிற்சியினால் உளநோய் நீங்கும்.
நிறைமனமும், ஈகையோடு, பொறுமை, கற்பு,
நேர்நிறையும், மன்னிப்பும் இயல்பாய் ஓங்கும்.
இறையுணர்வு, விழிப்பு நிலை, அறிவுக் கூர்மை,
இனியசொல், எண்ணத்தின் உறுதி. மேன்மை
மறைபொருளாம் மனம் உயிர்மெய் யுணர்வு கிட்டும்.
மாதவமாய்க் பிறப்பிறப்புத் தொட அறுக்கும்.” (ஞாக.பா.1510)

காயகற்பப் பயிற்சி செய்வதால் உடல் நோய்கள் மனநோய்கள் நீங்கும். காம உணர்வு கட்டுக்குள் இருக்கும். நல்ல எண்ணங்கள் மலரும்.

நோய் வராமல் காத்துக் கொள்ளவும், நோய்களின் தாக்குதலைத் தாங்கிக் கொள்ளும் சக்தியும் பெருகும்.

வித்துக் குழம்பில் உள்ள குற்றங்களைப் போக்கி வித்துக்குழம்பை இறுகி உறையச் செய்வதனால் உயிர்த்துகள் எண்ணிக்கை மிகுந்து சீவகாந்தத் திணிவு ஏற்படுவதால் மனநோய்களும் நீங்குகின்றன.

இருபப்தைக் கொண்டு திருப்தியாக வாழக்கூடிய மனநிறைவால், பிறருக்கு வழங்கும் ஈகைத் தன்மையும், சகிப்புத் தன்மையால் பொறுமையும், கற்புணர்வும், உயிர்களிடத்து நேர்நிறை உணர்வாகி சமநோக்கும், மன்னிக்கும் மனமும் இயல்பாகவே உயர்வடையும்.

அதனால் இறையுணர்வில் வாழும விளைவறிந்த விழிப்பு நிலையில் செயல்படக்கூடிய அறிவுக்கூர்மையும், பேசும் வார்த்தை இனிமையாகவும், எண்ணத்தின் வலிமையும் மேன்மையடையும்.

அதன் காரணமாக மறை பொருட்களாக உள்ள மனம், உயிர். இறையுணர்வு ஆகியவற்றில உண்மை உணர்வு கிட்டும்.

இதுவே மனிதனின் முழுமைப் பேறுமாகையால் பிறவித்தளை அறுபடும்.

கருமையக் களங்கங்கள் தூய்மை பெறாதவரை துன்பப் பிறவிகள் நீடித்துக் கொண்டு இருக்கும்.

கருமையம் தூய்மையடைவதால் இறக்க வேண்டியதுமில்லை. பிறக்க வேண்டியதுமில்லை. ஆனந்தமாக வாழலாம். (சித்தர்களின் காயகற்ப பயிற்சி, ஊரெங்கும் உள்ள மனவளக்கலை மன்றங்களில் சொல்லித் தரப்படுகிறது.)

## 6. நல்லாரிணக்கம் தந்து ஆட்கொண்ட அதிசயம்.

”விலங்குகளுக்கும் விலங்கு நிலையில் உள்ள மக்களுக்கும் இன்பம் உடலளவில்தான்.

பசியால் வாடிய ஒரு நாய் அல்லது ஓநாயைப் போல அவ்வளவு சுவைத்துச் சாப்பிட எந்த மனிதனாலும் முடியாது.

எனவே, நாய்க்கும் ஓநாயக்கும் இன்பம் உடலளவிலேயே. மனிதர்களிடம் இன்பம் சற்று உயர்ந்து நிற்கிறது.

எண்ணத்தால் இன்பம் பெற அவனால் முடியும். ஞானியிடம் இருப்பதே இன்பத்தில் உயர்ந்த நிலை.

இது ஆன்மாவில தோன்றிய இன்பமாகும். எனவே, வேதாந்திக்கு ஆன்மாவை அறிபவரே பலனுடைய முயற்சி.

ஏனெனில் இதுவே ஒப்புயர்வற்ற இன்பத்தை அளிக்கிறது. புலன்களால் கிடைக்கும் இன்பம் அல்லது உடல் இன்பம் அவனுக்கு மிக்க பயன் தருவதல்ல,

முடிவில் ஞானமே நம் ஒரே இலட்சியமாக வேண்டும். இதுதான் உயர்ந்த இன்பம் தருவதாகும்." (சுவாமி விவேகானந்தரின் ஞான தீபம்-பாகம்.6 -பக்.206)

"எண்ணிலேன் திருநாமம்
அஞ் செழுத்தும் என் ஏழைமை அதனாலே
நண்ணிலேன் கலைஞானிகள்
தம்மொடு நல்வினை நயவாதே
மண்ணிலே பிறந்து இறந்து
மண்ணாவதற்கு ஒருப்படு கின்றேனை
அண்ணல் ஆண்டுதன் அடியரில்
கூட்டிய அதிசயம் கண்டாமே." (திருவாச.பா.433)

என்னுடைய அறியாமையின் காரணமாக நான், இறைவனுடைய திருப்பெயராக விளங்கும் திருவைந்தெழுத்தை நினைக்கவில்லை.

நல்வினைப் பயனை விரும்பி, கலைஞானம் உள்ள அறிஞர்களோடுசேர்ந்து இருக்கவில்லை.

இந்த "மண் உலகில் வந்து பிறந்து, இறந்து மண்ணாய்ப் போவதற்கே சம்மதம் உடையவனாய் இருந்தேன்.

ஆனால் சிறப்புப் பொருந்திய எம் இறைவன், என்னை ஆட்கொண்டு, தன் அடியார் திருக்கூட்டத்தில் சேர்த்துக் கொண்டான்.

இது வியப்புக்கு உரிய செயல் என்று அறிந்து கொண்டேன்.

"நல்வினைப் பயனை விரும்பி, கலைஞானம் உள்ள அறிஞர்களோடுசேர்ந்து இருக்கவில்லை" என வருத்தப்படுகிறார் மாணிக்கவாசகர். "ஆராய்ந்து நட்பு கொள்" என்பது வேதாத்திரியம்.

"நட்புக்கோர் நோக்கமுண்டு, நாடுபவர் தரம் ஒக்கும்
கட்புலனுக் கெட்டாது, கருத்தை ஊன்றிக் காண்பீர்!
உட்பகையைச் சுயநலத்தை உள்வைத்தும் நடிப்பார்கள்
நுட்பமுடன் ஆராய்ந்து. நோதல்தவிர்த் தேவாழ்வோம்,"(ஞாக.பா.340)

மனிதர் தனியாக வாழமுடியாது. பிறரொடு இணைந்துதான் வாழமுடியும்.

அந்தவகையில் ரத்த சம்மந்தமுடைய உறவினர்கள் அல்லாதவர்களுடன் கொண்டுள்ள உறவு நட்பு எனப்படும்.

ஒத்தும் உதவியும் வாழ்வதற்கான மனிதப் பண்பை வெளிப்படுத்துவது நட்பு ஆகும்.

நட்பை நாடுபவரின் தரதிற்கேற்ப, அவர்களின் நட்பிற்கான நோக்கம் வெளிப்படும்.

புலன்களுக்கு அப்பாற்பட்டு சிந்தித்து நட்பு கொள்ள வேண்டும்.

வெளித்தோற்றம் பேச்சு, நடவடிக்கையை வைத்துக் கண்டு கொள்ள முடியாது.

மனதிற்குள் பகை உணர்வை வைத்துக் கொண்டும். சுயநலத்தை மனதில் கொண்டும் நடிப்பார்கள்.

நுணுக்கமாக ஆராய்ந்து துன்பம் தவிர்த்து வாழ வேண்டும்.

கபடமானவர்களின் நட்பு துன்ப வாழ்வைக் கெடுத்துவிடும்.

ஆகவே நட்பு பாராட்டுபவரின் உள்நோக்கம் என்ன என்பதை ஆராய்ந்து நட்பு பாராட்ட வேண்டும்.

”நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் நன்று” (ஔவையார் மூதுரை.9)

நட்பு நலம் பற்றி ஔவையாரின் மூதுரையும் நம்மை வழிபடுத்தும்.

## 7.தவறுகளைத் திருத்தும் அசிசயம்

”செம்படவன்  நீரினுள் மீன் பிடிக்க வலை வீசுகிறான்.  அவ்வலையில் அகப்பட்டுக் கொள்ளாத மீன்கள் இருக்கின்றன.

அம்மீன்களைப் போன்றவர்கள் நித்திய சித்தர்கள்.  மச்சங்களுள் ஒரு சில, வலையினின்று தப்பித்துக் கொள்ளத் துள்ளிக் குதித்து முயலுகின்றன.

முமுகூக்கள் அத்தகையவர்கள்.  முயலும் மீனகளுள் ஒரு சில, வலையினின்று வெளியே எட்டிக் குதித்து ஒடிப் போகின்றன.  முக்த புருஷர்கள் அத்தகையவர்கள்.

ஆனால் மீன்களுள் பெரும்பான்மை வலையினுள் இருக்கும் சேற்றுக்குள் புதைந்து கொண்டு தாங்கள் பத்திரமாக இருப்பதாக எண்ணிக் கொள்கின்றன.

செம்படவன் வலையை வெளியே இழுக்கின்ற பொழுது அவை யாவும் அவன் கைக்கு வந்தாக வேண்டும் என்பதை அவைகளுக்குத் தெரியாது.

அப்படிப் புதைந்து கிடக்கின்ற மீன்கள் போன்றவர்கள் உலகப் பற்றுடையவர்கள். ((ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ, பக்.262)

பொத்தை ஊன்சுவர் புழுப்பொதிந்து
  உளுத்து அசுமபு ஒழுகிய பொய்க்கூரை
இத்தை மெய் எனக் கருதிநின்று
  இடர்க் கடல் சுழித்தலைப் படுவேனை
முத்து மாமணி மாணிக்க
  வயிரத்த பவளத்தின் முழுச்சோதி
அத்தன் ஆண்டுதன் அடியரில்
  கூட்டிய அதிசயம் கண்டாமே. (திருவாச.பா.434)

துளைகளும், தசையால் ஆகிய சுவர்களும், புழு நிறைந்ததும், வலிமை அற்றதும், நிணம் ஒழுகுவதும் ஆகிய நிலையற்ற குடிசையை (உடம்பை) உண்மைப் பொருள் என்று நினைத்து, துன்பமாகிய கடலில் விழுந்து. சுழியில் சிக்கி, அலைக் கழிக்கப்பட்டுக் கொண்டு இருந்தேன்.

அப்படிப்பட்ட என்னை, முத்து, பெரிய மாணிக்க மணி, வைரம், பவளம் முதலியவற்றின் ஒளி எல்லாம் ஒன்று சேர்ந்தது போன்ற பேரொளிப் பிழம்பாய் விளங்குபவனும், முதல்வனும், எம் தந்தையும் ஆகிய இறைவன், ஆட்கொண்டு, தன் அடியார் திருக்கூட்டத்தில சேர்த்துக் கொண்டான். இது வியப்புக்கு உரிய செயல் என்று அறிந்து கொண்டேன்.

தவறுகளைத் திருத்தி வாழ்ந்தால், பற்றற்று வாழலாம். இறையுணர்வு பெறலாம். இறைவனது திருவருளில் நினைந்து மகிழலாம்.
வேதாத்திரியம் என்ன சொல்கிறது?

"பழக்கமே பற்றாக! பாசமாக!
  பரிணமித்துச் சிக்கல் வாழ்விலாச்சு.
இழக்கின்றோம் இயற்கைவள இன்பமெல்லாம்.
  இதையுணர்ந்து ஏற்றபடித் திருந்தி வாழ்வோம்" (ஞாக.பா.623)

ஒரு எண்ணமோ, சொல்லோ, செயலோ திரும்பத் திரும்பச் செயலூக்கம் பெறுவது பழக்கமாகி விடுகிறது.

உடல் செல்களில் விரிவு சுருக்கமாக, மூளையில் எண்ணமாக, ஜீவகாந்தக் களத்தில் பிரதிபலிப்பாக, கருமையத்தில் தரமாகவும் ஆகிவிடுகிறது.

எண்ணம்தான் சொல்லாக, செயலாக மலர்கிறது. செயலாற்றினால் விளைவும் கட்டாயம் வருகிறது.

அந்த விளைவை மனித மனம் இன்பமாக துன்பமாக உணர்கிறது.

அழிந்து போகக்கூடிய உடலை மனிதன் ”நான்” என்று தவறாகக் கருதிக் கொண்ட மன மயக்கத்தால், தான் என்ற அதிகாரப் பற்றிலும், தனது என்ற பொருள் பற்றிலும், மக்கள் பாசத்திலும் எல்லைகட்டி வாழத் தொடங்கிய பழக்கமானது எண்ணிடலங்காத பிறவிகளில் வித்தின் வழியாகத் தொடர்ந்து வந்து கொண்டுள்ளது.

பழக்கமே படிப்படியாக வளர்ச்சி அடைந்து, ஒன்றிலிருந்து மற்றொன்றாக பற்றும் பாசமும் தோன்றியது.

பற்றும் பாசமும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தும். எதிர்பார்ப்புகள் அனைத்தும் ஏமாற்றத்தில் முடியும்.

அதனால் மனித வாழ்வு சிக்கல்கள் நிறைந்ததாகி விட்டது.

வாழ்க்கைச் சிக்கல்களில் சிக்கியுள்ள மனிதனால் இயற்கை வள இன்பத்தையெல்லாம் அனுபவிக்க முடியாமல் இழப்பு ஆகிறது.

வாழ்வின் நோக்கம் இனிமையாக வாழ்வது ஆகும்.

இந்த உண்மைகளை உணர்ந்து பழக்கங்களை எல்லாம் விளக்க வழியில் ஆய்ந்து, வாழ்வின் நோக்கத்திற்கு ஏற்றபடி திருத்திக்கொண்டு ஆனந்தமாக வாழ்வோம். இறையருளைப் பெறுவோம். வாழ்க வளமுடன்.

## 8. பரமானந்தம் அடையும் அதிசயம்.

ஈசுவர தரிசனம் எத்தகையது?

”நாடகம் நடைபெறுவதை நீங்கள் பார்த்திருக்கி  றீகள் அல்லவா? நாடகக் கொட்டகைக்குள் அமர்ந்து கொண்டு என்னென்னவோ விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றீர்கள்.

திடீரென்று திரை மேலே போகிறது. நாடகம் துவங்குகிறது. அப்பொழுது பேச்சு நின்று விடுகிறது.

எல்லோர் மனதும் நாடகத்தில் லயமாகிறது. கொஞ்ச நேரத்திற்குப் பிறகு திரை கீழே விழுந்தால் நீங்கள் இப்புறமும் அப்புறமும் பார்க்கவும், மற்றவர்களோடு பேசவும் ஆரம்பிக்கிறீர்கள்.

அது போன்று முழுமனதும் அந்தர்முக திருஷ்டியில் போகுமானால் சாமதிகூடி ஈசனுடைய காட்சி கிடைக்கிறது.

அப்பொழுது உலக விவகாரங்கள் இல்லை. மாயை என்னும் திரை மறுபடியும் மூடினால் மனது புற உலக விவகாரங்களுக்கு வருகிறது.
(ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ, பக்.262)

"நீக்கி முன் எனைத் தன்னொடு
  நிலாவகை குரம்பையில் புகப்பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன
  சொல்செய்து நுகம் இன்றி விளாக்கைத்துத்
தூக்கி முன்செய்த பொய்ய அறத்
  துகள் அறுத்து எழுதரு சுடர்ச்சோதி
ஆக்கி ஆண்டுதன் அடியரில்
  கூட்டிய அதிசயம் கண்டாமே". (திருவாச.பா.435)

எழுந்து தோன்றும் ஒளிமயமானவன். முன்பு என்னைத் தன்னோடு இருந்தார், உடம்பில் தங்க வைத்தான்.

ஆனால் இப்பொழுது என்மீது அருள் நோக்கம் செய்து, நொடிப் பொழுதில், ஒரு சொல்லைச் சொல்லி, பொய் ஆகிய மயக்கம் தீர்த்தான்.

பாசமாகிய குற்றம் நீங்கவும், ஆக நுகத்தடி இல்லாமலேயே நேரடியாகத் தன்னுடைய திருவடிகளில் பிணைத்து, தன் அடியார் திருக் கூட்டத்தில் சேர்த்துக் கொண்டான். இது வியப்புக்கு உரியசெயல் என்று அறிந்து கொண்டேன்.

"பரநிலையை உயிர் உணர்ந்து கொண்டால் பரமானந்தமே!" என்பது வேதாத்திரியம்.

"பரம் என்பதே வெளியாம்
  பரிணாமம் நண்ணியக்கப் பரம அணு,
பரம அணுத் திரட்சி அணு,
  பல அணுக்கள் பேரணுவாம். கூட்டம் தாது,
பர வெளியில் காணு கின்ற
  பலகோடி அண்டங்கள் தாது சேர்க்கை,
பரநிலையை உயிர் உணர்ந்து
  பல இயக்க விதியுணர்ந்தால்,பரமானந்தம்." (ஞாக.பா.1021)

பரம் என்றால் அதைவிடப் பெரியதுமில்லை., நுண்ணியதுமில்லை என்பதாகும்.

இருப்பு நிலையாகிய சுத்த வெளியே பரம் ஆகும். அதனால் தான் பரமபிதா, பரம புருஷன் என்றெல்லாம் கடவுள் பெயராகக் கூறுகிறார்கள்.

சுத்தவெளி பரிணமித்து தன் நிலையில் மாற்றம் பெற்ற, தற்சுழற்சி என்ற நுண்ணிய இயக்கமாக இருப்பது பரம அணு.

பரம அணுக்களின் கூட்டு திரட்சி நிலை அணு அல்லது விண் ஆகும்.

விஞ்ஞானிகள் கூறும் அணு மூலக்கூறுகளின் கூட்டாகிய பஞ்சபூதக் கூட்டு ஆகும்.

மெய்ஞானிகள் கூறும் அணு பரம அணுக்களின் கூட்டு ஆகும்.

பல அணுக்களின் கூட்டு இயக்கம் பேரணுவாகும். பேரணுவின் கூட்டு இயற்கைக் கனிப் பொருளாகிய தாதுவாகும்.

பரமாகிய வெளியில் காண்கின்ற பல கோடிக்கணக்கான கோள்கள் தாதுக்களின் சேர்க்கை ஆகும்.

மனதை உடையவனாதலால் மனிதன் என்கிறோம்.

மனதை, மனதிற்கு மூலமான உயிரில் ஒடுக்கினால் அறிவு என்ற நிலையில் உயிரை உணர்ந்து, அறிவு விரிவடைந்து, பல விதமான இயக்கங்களையும் உணர்ந்தால், அதுவே பேரின்ப நிலையாகிய பரமானந்தம் ஆகும்.

பரமான வெளி, அனந்தம் என்னும் எண்ணிலடங்காத தோற்றங்களாகி, ஆதியும் அந்தமுமாக இருப்பதை உணரும் நிலையே பரமானந்த நிலை. (பரம் + அனந்தம்.) இந்த நிலையை உணர்ந்து நாமும் ஆனந்தமாக வாழ்வோமாக. வாழ்க வளமுடன்.

## 9. அரூபம் உணரும் அதிசயம்.

பகவான் ராமகிருஷ்ணர் கூறுகிறார்.

“சாதாரண மக்கள் பரவசநிலையை அடைவதில்லை. எனக்கு ஏற்பட்ட ஆன்மீக வேகத்தில் கால்பங்கே மற்றவர்களின் உடலையும், உள்ளத்தையும் அழித்துவிடப் போதுமானது.

இரவு பகலாக அன்னையின் ஏதாவது ஒரு காட்சி கிடைத்துக் கொண்டே இருந்தது.

அப்பொழுது அன்னையின் காட்சி மட்டும் இல்லாதிருந்தால் இவ்வுடல் அழிந்து போயிருக்கும்.

ஆறு வருடங்கள் எனக்கு தூக்கமே இல்லை. கண்கள் இமைப்பதே இல்லை. எவ்வளவு முயன்றும் கண்களை மூடவே முடியவில்லை. நேரம் போவதே தெரியாது. உடல் உணர்வுகள் அறவே இல்லை.

அன்னையின் நினைவுகளிலிருந்து சிறிது நேரம் மீண்டாலும் பைத்தியம் பிடித்த நிலைக்கு வந்து விடுவேன்.

பயம் கவ்விக் கொள்ளும். ‘அம்மா’ என்று அலறுவேன். என்னை மட்டும் புறக்கணித்துவிடாதே, உன்னுடைய தரிசனத்தை எனக்குக் கொடு.

உன் கருணையை என் மீது காட்டு, உன் திருப்பாதங்களைச் சரண் அடைந்த எனக்கு வேறு கதி இல்லை என்று வேண்டுவேன்.

இவ்வாறு கதறிக் கதறி அழுத பிறகு என்னுடைய மனம் மறுபடியும் பரவச நிலை அடைந்துவிடும்.

இந்த உலகமும் உடலும் எனக்கு அற்பமாகத் தோன்றும். அன்னையின் தரிசனம் மட்டுமே ஆறுதல் அளிக்கும் என்றார்.

இதனால் ராமகிருஷ்ணருக்குச் சித்த பிரம்மை பிடித்து விட்டதாகவே எல்லோரும் கருதினார்கள்.

தாயார் சந்திராதேவி மிகவும் கவலை அடைந்தார். பிரபல ஆயுர்வேத வைத்தியர் கங்கா பிரசாத் சென், சிகிச்சை அளித்தார். சிகிச்சையினால் எந்தப் பயனும் ஏற்படவில்லை.

கடைசியாக ராமகிருஷ்ணரின் முதல் குருவாகிய பைரவி பிராம்மணி அம்மையார், உலகத்தாரால் பைத்தியக்காரத்தனம் என்று கருதப்பட்ட செயல்கள். மிக உன்னத பக்தியாகிய மகா பாவத்தின் அறிகுறிகள் என்று நிரூபித்தார்.

இத்தகைய அறிகுறிகள் அவதார புருஷர்களிடம் மட்டும்தான் காணப்படும் என்று கூறினார்.

இந்த அனுபூநிலையைத்தான் மாணிக்கவாசகர்” நுகர்த்திடும் பித்தர்சொல் தெளியாமே” என்று இப்பாடலில் பாடுகிறார்.

”உற்ற ஆக்கையின் உறுபொருள்
  நறுமலர் எழுதரு நாற்றம் போல்
பற்று லாவதோர் நிலையிலாப்
  பரம்பொருள் அப்பொருள் பாராதே
பெற்றவா பெற்ற பயன் அது

  நுகர்த்திடும் பித்தர்சொல் தெளியாமே
அந்தன் ஆண்டுதன் அடியரில்
  கூட்டிய அதிசயம் கண்டாமே” (திருவாச.பா.436)

பெற்ற உடம்பைக் கொண்டு, பூவில் வெளிப்படும் மணத்தைக் கண்ணால் காண முடிவதில்லை. எனினும் அதனை உணர முடிகிறது.

அது போல இறைவனைக் கண்ணால் காண முடிவதில்லை. எனினும் அவனை உணர முடியும்.

இதனை உணராத விதிவசத்தால் அறிவிலியாய் இருப்போர் சொல்லை நம்பி, ஏமாந்து போகாத வயையில், எம் தந்தை எம்மை ஆட்கொண்டு,

தன் அடியார் திருக்கூட்டத்தில் சோ ர்த்துக்கொண் டடா ன். இது வியப்புக்கு உரிய செயல் என்று அறிந்து கொண்டேன்.

அரூபமான கடவுள் தத்துவத்தை நமக்குத் தருகிறது வேதாத்திரியம்.

- அதன் இறைத்தத்துவம் பரமாத்மாவே ஜீவாத்மாக வருகிறது என்ற உபநிடதக் கருத்துக்கும்,....
- எனது தந்தையும் நானும் ஒன்று என்ற விவலியத்தின் வாசகத்துக்கும்,.....
- அனைத்துப் புகழும் இறைவனுக்கே என்னும் திருக்குரானின் வசனத்திற்கும்,....
- சிவமே சீவனாயிற்று என்ற சைவசித்தாந்தப் பார்வைக்கும்,
- அறிவேதான் தெய்வம் என்ற சித்தர்களின் வாக்கிற்கும்,...
- அறிவேதான் நான் என்ற இரமணரின் உள்ளுர்வுக்கும்
- ஆதிசங்கரரின் நிர்வாண சதகத்திற்கும்....

தர்க்கரீதியான விஞ்ஞானப் பூர்வமான விளக்க உரையாக அமைகிறது.

ஐம்புலன்களால் அறியமுடியாதது அரூபம்.

”சத்து சித்து ஆனந்தம் அனைத்து மாகி...
  சர்வ வியாபகமாயும் நிறைந்து உள்ள
அத்துவித ஆதிபராசக்தி தன்னை
  ஐயுணர்வில் எதைக் கொண்டும் அறியப் போகா
தத்துவங்கள் அனைத்திற்கும் மூலமான
  தலையாய நம் சக்தி அரூப மன்றோ?
வித்து நிலையை அறிந்து அறிவை ஒன்ற
  விவேகயூகம் உயர்ந்து அதே தானாகும்” (ஞாக.பா.1383)

சத்து என்பது பூரணமான பேராதார நிலை (Potential Energy) அதன் எழுச்சி நிலையான அணு முதல் அண்டங்கள் பிண்டங்கள் அனைத்தும்

தோற்றம், இயக்கம், மாற்றம் என்ற இயக்கத்தில் உளதால் சித்து எனப்படும்.

பரிணாம சிறப்பின் உச்சமாகிய உணரும், அறியும் நிலையாகிய அறிவு ஆனந்தம் எனப்படும்.

இம்மூன்று நிலைகளை அடைந்தும் ஆதி நிலையாய் குறைவுபடாமல் பேதப்படாமல் பூரணமாக நிறைந்து எல்லையற்றிருக்கும் அரூப சக்தியைக் கண், காது, மூக்கு, நாக்கு, ஸ்பரிசம் இவற்றில் எதைக் கொண்டும் அறிந்து கொள்ள முடியாது.

ஏனெனில் நாமாக நமது மூலமாக இருக்கும் அந்தச் சக்தி அரூபமாக இருக்கிறது.

உடலியக்கத்திற்கும், அறிவியக்கத்திற்கும் மூலமான விந்துவின் நிலையை அறிந்து கொள்ள வேண்டும்.

அவ்விடத்தே அறிவை நிறுத்திப் பழகி வரும் தவத்தால் ஏற்படும் ஓர்மை நிலையில் அறிவே அதுவாகி - ஆதியாகி விடும். இதை யூக உணர்வினால் மட்டும் அறிந்துகொள்ள முடியாது.

ஆகாயத்தில் நாம் பார்க்கும் போது கண்களுக்குப் புலனாவது வெட்டவெளி அல்ல. அது அணுவெளி.

அணுக்கள் மீது சூரியன் முதலிய கிரகங்களின் ஒளிக்கதிர் படுகிறது. இதனால் ஏற்படும் பிரதிபலிப்பு ஒளி நமக்குத் தோற்றமாக வெளிச்சமாகப் புலனாகிறது. சுத்த வெளி இருள், அகண்டம், எனும் நிலையில் அரூபமானது.

## 10. மும்மலங்களிலிருந்து வெளியே வரும் அதிசயம்!

இறைநிலை, மானுடம் உய்யும் பொருட்டு. ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலமங்களை பதிவுகளுக்குத் தகுந்தவாறு நீக்கி வருகிறது.

இதனை, சிவபெருமான் முப்புரம் எரித்தான் என்பார்கள் மூடர்கள் – முப்புரம் என்றால் அது புறத்திலே இருக்கும் ஊர் அல்ல – நம்முளே இருக்கும் மும்மலங்கள் ஆகும்

ஆன்மாவை சுற்றி மும்மலங்கள் உள்ளன என்பது உண்மை.

ஆணவம், கன்மம், மாயை என்று மும்மலங்களை அழைப்பார்கள்.

இவைகளை நாம் சாதனையின் சக்தியால் அதாவது தவத்தால், தற்சோதனையைால், வினைப்பதிவுகளை தீக்கிரையாக்க வேண்டும். இதனை திருமூலர்,

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பார்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வார" (திருமந்திரம்)

"முப்பரங்களை, கோபத்தீயால் நொடிப் பொழுதில் எரித்து அழித்து அருள் செய்த உண்மை நெறியினனாகிய இறைவன்" என்று மாணிக்கவாசகர் பாடுகிறார்.

இருள்திணிந்து எழுந்திட்டு அதுஓர்
  வல்வினைச் சிறுகுடில் இதுவித்தைப்
பொருள் எனக்களித்து அருநரகத்து
. இடைவிழப் புகுகின்றேனைத்
தெருளும் மும்மதில் நொடிவரை
  இடிதரச் சினப்பதத் தொடுசெந்தீ
அருளும் மெய்நெறி பொய்ந்நெறி
  நீக்கிய அதிசயம் கண்டாமே." (திருவாச.பா.437)

- விளங்கும் மதில்களோடு கூடிய முப்பரங்களை, கோபத்தீயால் நொடிப் பொழுதில் எரித்து அழித்து அருள்செய்த உண்மை நெறியினனாகிய இறைவன்.
- ஆணவ மலத்தால் பிணக்கப்பட்ட தீவனை வசத்தால் வந்த சிறிய குடிலாகிய உடம்பை, உண்மை என்று எண்ணி, மகிழ்ந்து இருந்து, கடும் நரகில் விழுவதற்கு இருந்த என்னை,
- பொய்யான நெறியில் இருந்து விடுவித்து. ஆட்கொண்டது, வியப்புக்கு உரியசெயல் என்று அறிந்து கொண்டேன்.

நம் ஆணவ மலத்தை எப்படி அழிப்பது? வேதாத்திரியம் விடையாக வருகிறது.

"வெளியில் வா"

"திறந்துகொள்! தான் தனது என்று சொல்லும்
  சிற்றறையை! வெளியே வா! அகன்று நோக்கி
பரந்துலவு! உலக சமுதயாத்தின் பரப்பகத்தில்
  பற்று அறும், கடமையினால் பழுக்கும் ஞானம்" (ஞாக.பா.1367)

மும்மலங்கள் எனப்படுவது ஆணவம், கண்மம், மாயை.
ஆணவம் என்பது தன்முனைப்பு. கன்மம் என்பது வினைப்பதிவுகள்.
மாயை என்பது புலன் கவர்ச்சி.

மும்மலங்களுள் முதன்மையானது ஆணவம்.

இது 'தான்' எனும் அகங்காரப் பற்றாகவும், 'தனது' எனும் பொருள் பற்றாகவும் மாறி உடலளவில் எல்லைக்கட்டிக்கொண்டு மாயை எனும் மயக்க நிலையில் இயங்கும்போது. . . . . ..

கன்மம் எனும் வினைப் பதிவுகள் கூடிக்கொண்டே செல்வதால் பிறவியின் நோக்கமாகிய முழுமைப்பேறு எனும் வீடுபேறு அடைவதென்பது எட்டாக் கனியாகவே உள்ளது.

'நான்', 'எனது' எனும் எல்லைக்குள் சிக்குண்ட மனதை அதன் குறுகிய நிலையிலிருந்து மீட்டு, சுற்றியுள்ள உலகையும், பிரபஞ்சத்தையும், இயற்கையையும் மனவிரிவுகொண்டு உற்றுநோக்கும்போது. . . . . .

பரம்பொருளின் எல்லையற்ற உண்மைநிலையும், அதன் அறிவாட்சித்தரமும், அதன் அன்பும் கருணையும், அனைத்துயிர்களையும் காத்து இரட்சிக்கும் சிறப்பையும் அறிந்துகொள்ளும்போது. . . . . .

'நான்' எனும் சிற்றெல்லை சிதைந்து, பற்றுகள் நீங்கி, 'நாம்' எனும் சமுதாய உணர்வு மேம்படும். ஐவகைக் கடமைகளை முறையாக ஆற்றி சமுதாய உயர்வுக்கு நம்மால் இயன்ற தொண்டு செய்யவேண்டும் எனும் ஞானம் பெருகும்.

நாமும் ஞானம் பெற்று ஆனந்தமாக வாழ்வோம். இறையருளைப் பெறுவோம். வாழ்க வளமுடன்.

## துணைநின்ற நூல்கள்.


1. திருவாசகம், சுவாமி சித்தபவானந்தர், திருப்பராய்த்துறை.
2. திருவாசகப் பாடல்கள், புலவர் வீ.சிவஞானம் ,விஜயா பதிப்பகம், கோவை.
3. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம்,ஈரோடு
4. இணையதள தகவல்கள்.
5. ஞானக்களஞ்சிய கவிகள், இரா. மாரியம்மாள் மோகன்தாஸ், வேதலோக அன்பு நிலையம், பொள்ளாச்சி
6. தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு, மன்னார்குடி பானுகுமார். அழகுப் பதிப்பகம், சென்னை.
7. வேதாத்திரி மகரிஷி பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.

8. ஸ்ரீராமகிருஷ்ணரில் உபதேச மஞ்சரீ, ராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை.